1982 மார்ச் 2] [டாக்டர். எச். வி. ஹண்டே]

எடுத்து, ஆராய்ச்சி, செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள். இனி மேல் வராத வகையிலே எல்லாவற்றிற்கும் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். ஆகவே, அதிலே எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பகிறேன்.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. துரைமுருகன் : இரண்டாவது கால் அட்டென்ஷனுக்கு போவதற்கு முன்னால், ஒரு சின்ன கால் அட்டென்ஷன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மாதிரி கேட்க முடியாது. பின்னால், இதுவே ஒரு முன்மாதிரியாகி விடும்.

திரு. துரைமுருகன் : உறுப்பினர் சொன்னதிலோ, அமைச்சர் சொன்னதிலோ நான் கேள்வி கேட்கவில்லை, நான் கேட்பது வேறு பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த மாமன்றத்தில் தலைவரிடத்திலே நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விழைகிறேன். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, இரண்டுகட்சிகளைச் சேர்ந்தவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்றனர். எதிர்க்கட்சியிலே இருக்கிற நாங்கள் 4,5 கவனத் ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளோம். இந்த அவையிலே ஆளுநர் உரை ஆற்றுவதறகு முன்னரே கொடுத்துவிட்டோம். அவற்றையெல்லாம் திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எழுதிக் கொடு என்று சொன்னார்கள். திருப்பியும் எழுதிக்கொடுத்தேன், இதுவரையில் எங்களுடைய எந்த கால் அட்டென்ஷனும் எடுக்கப்படவில்லையே, ஏன் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்.